# மருத்துவ சேவையை தேசிய மயமாக்குதல் வேண்டி உரிமை கோரல்

இன்றைய இக்கட்டான கோரானாவின் கோரப்பிடியில் உலகமே சிக்கித் தவிக்கும் இந்த சூழலில் ஒரு உண்மை வெட்ட வெளிச்சமாகிறது. அது என்னவென்றால் சாதாரண காலகட்டங்களில் 80 விழுக்காடு ஏழை மற்றும் நடுத்தர வர்க்கத்தினர் பயன்படுத்திய தனியார் மருத்துவமனைகளும், அதன் சேவைகளும் கூட அவர்களுக்கோ, ஏன் எந்த, பணக்கார சிறுபான்மை சமூகத்தால் இந்த தனியார் மருத்துவமனைகள் வளர்ந்ததோ, அவர்களுக்கும் கூட பயன்படவில்லை.

தனியார்மயமாக்குதலினால்,

நாட்டு மக்களின் நலன் கருதி உருவாக்கப்பட்ட பொது மருத்துவமனைகள் தான் பெரிதும் புறக்கணிக்கப்பட்டுள்ளது.

தனியார்மயமாக்குதலால், அரசு மருத்துவமனைகளுக்கு நிதி ஒதுக்கப்படாததால், பெரும்பான்மையான 80% மக்கள் தனியார் மருத்துவமனைகளையே நம்பியிருந்தனர். சில முக்கிய மருத்துவ கல்லூரிகள் சார்ந்த அரசு மருத்துவமனைகளில், Ecg கருவிகள் கூட இல்லாத அவலநிலை உள்ளது. அங்கு நோயாளிகள் பரிசோதனைகளுக்கும், மருந்துகளுக்கும், வெளியே செல்லும் நிலையே உள்ளது. மேலும் பரிசோதனை கருவிகள், ஊழியர்கள் முதற்கொண்டு மருந்துகள் வரை தட்டுப்பாடான நிலையே தொடர்கிறது.

தனியார் மருத்துவமனைகள் சாதாரண காலகட்டங்களில் கூட அதிக கட்டணம் வசூலிப்பதும், தேவையற்ற பரிசோதனைகள், மருந்துகள் மற்றும் அறுவை சிகிச்சைகள் செய்வதும் கண்கூடான உண்மைகள். ஒருபுறம் தரமற்ற தனியார் மருத்துவமனைகள் முதல் மறுபுறம் ஐந்து நட்சத்திர கார்ப்பரேட் மருத்துவமனைகள் அனைத்திலுமே, மருத்துவ சேவையை நாடி வரும் நோயாளிகள் ,பொருளாதார சிக்கல்களை மட்டுமின்றி அடிப்படை ஆரோக்கியம் பெறுவதிலும் கூட சிரமப்படுகின்றனர்.

ஆனால் கோரோனா இந்த முழு அமைப்புகளையும் தற்போது அம்பலப்படுத்தியுள்ளது. ஊரடங்கு அறிவிக்கப்பட்ட உடனுக்குடன் அனைத்து தனியார் மருத்துவமனைகளும் மூடப்பட்டுவிட்டன.கோரானா தொற்று இல்லாத சாதாரண நோயாளிகளைக் கூட

பரிசோதிக்கவோ, அனுமதிக்கவே கூட மறுத்துவிட்டனர். மற்ற மருத்துவ சேவைகள் அனைத்தும் முடக்கப்பட்டன. எல்லாவற்றிற்கும் மேலாக அவசர சிகிச்சைக்கு அரசு ஆம்புலன்ஸ்கள் விட 10 மடங்கு அதிகமாக சேவை புரிந்து கொண்டிருந்த தனியார் ஆம்புலன்ஸ் களும் கூட நிறுத்தப்பட்டது. கோரானா தோற்று

உள்ளவர்களுக்காக இவை எப்போது கட்டாயத்தின் பேரில் மீண்டும் இயங்கத் தொடங்கியது, அப்போது இந்த தனியார் மருத்துவமனைகளில், சேவை கட்டணங்கள் மிகவும் கடுமையாக இருந்தன. கோரானா தொற்று இல்லாத மற்ற நோயால் பாதிக்கப்பட்ட சிலர் சிகிச்சை பெறுவதற்கு பேரம் பேசி பெரிய தொகைகளை செலவிட நேர்ந்த சில பல நிகழ்வுகளும் இங்கும் அங்குமாக நடந்தேறின. இது தனியார் மருத்துவமனைகளின் வியாபார நோக்கிலான பேராசைகளை அம்பலப் படுத்தியுள்ளது.

அதேவேளையில் அரசு மருத்துவமனைகளில் அதிக பாதிப்புக்கு உள்ளாகாத கோரானா தொற்றுக் கொண்டவர்களும், தொற்று உறுதி செய்யப்படாமல் தனிமைப் படுத்தப்பட்ட மக்களுமே பெருமளவில் குவிந்தனர். இதனால் தொற்று இல்லாத மற்ற நோயாளிகளுக்கு கூட சிகிச்சைகள் மறுக்கப்பட்டன. மேலும் நகரில் பல்வேறு பகுதிகளில் இயற்கை மரணம் அடைந்தவர்களுக்கு கூட தகனம் செய்வதற்கு கூடுதலான கட்டுப்பாடுகளுக்கும், பரிசோதனைகளுக்கும் உட்படுத்தப்பட்டதால் உரேங்கும் மரணமடைந்தவர்களின் உடல்கள் அனைத்தும் அரசு மருத்துவமனைகளில் குவியத் தொடங்கின.

இதனால் நாம் அனைவரும் ஒப்புக் கொள்ள வேண்டியது யாதெனில் சுதந்திரம் அடைந்ததில் இருந்து 1990 வரை இயங்கிய அரசு மருத்துவமனை சேவைகளை நமக்கு இது போன்ற பேரிடர் காலங்களில் பக்கபலமாக இருக்கும் என்பதே. இதிலிருந்து நம் இந்திய தேசிய மக்கள் புரிந்து கொண்ட பாடம் என்னவெனில், ஆரோக்கியம் என்பது நமது வாழ்க்கையின் மிக முக்கியமான அங்கமாகும். இதனை தனியார் மற்றும் பொது மருத்துவ சேவைகள் இணையாக இயங்குவதால் நமது ஆரோக்கியத்தை நம்மால் புறக்கணிக்க முடியாது. இதுபோன்ற சூழ்நிலைகளில், பலவகைகளில் பொதுநல சேவைகள் புறக்கணிக்கப்படுவதும் தனியார் சேவைகள் மிகமிக வியாபார ரீதியாக நடந்து கொள்வதையும் நம்மால் கண்கூடாக காணமுடிகிறது. இறுதியில் பொதுநல சேவை என்பது இல்லாது போகிறது.

நமக்கு தற்போது எல்லாம் தேசியவளங்களையும் முறையாக மக்களின் நலனுக்காக பயன்படுத்தும் வகையில் ஒரு வலுவான மருத்துவ சேவை அமைப்பு வேண்டும். கண்டிப்பாக அரசு அதற்காக மிகவும் செலவிட வேண்டியது அவசியம். அதற்காக அரசாங்கம் செல்வந்தர்களிடம் இருந்து வரி வசூலிக்க வேண்டி இருக்கும். பல ஆண்டுகளாக செல்வந்தர்கள் வரி குறைப்பு வரி சலுகைகள் என பல சலுகைகளை அனுபவித்து உள்ளதால், வரிவிதிப்பு அடுக்குகளும் அவர்களை வெகுவாக பாதிக்க போவதில்லை.

சிலரது சொகுசு வாழ்க்கையை விட பலரது வாழ்க்கையே மிக முக்கியமானதாகும். உலகில் எங்கெல்லாம் மருத்துவ சேவை தேசியமயமாக்கப்பட்டு உள்ளதோ அங்கெல்லாம் தகுந்த மருத்துவ முறைகள் பயன்படுத்த பட்டு, தேவையற்ற பரிசோதனை முறைகளும், மருந்துகளும் அறுவை சிகிச்சைகளும் தவிர்க்கப்பட்டு உள்ளது.

இதற்காக நமது கோரிக்கைகள்:

1) அனைத்து தனியார் மருத்துவமனைகளும் அவைகளுக்கான சொத்து மற்றும் இதர மதிப்பீடுகளுக்கு இணங்க நியாயமான இழப்பீடு தொகைகள் வழங்கப்பட்டு, அரசு மயமாக்கப்படல் வேண்டும். சிறிய தனியார் மருத்துவமனைகள் ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஆக்கப்பட வேண்டும்.

2) தற்போது உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்கள், சமூக சுகாதார மையங்கள், மாநில அரசு மருத்துவமனைகள், என அனைத்திலும் விரிவான வலுவான அடிப்படை வசதிகள் செய்யப்பட வேண்டும்.

3) எல்லா மருத்துவமனைகளிலும் செவிலியர்கள், மருத்துவர்கள், மற்றும் துணைநிலை மருத்துவ ஊழியர்கள் போதுமான அளவில் பணி அமர்த்தப்பட வேண்டும்.

எல்லா மருத்துவர்களும் அவர்களது மருத்துவ மேற்படிப்புக்கு முன்பு, கிராமப்புற மருத்துவ சேவை புரிவதை கட்டாயமாக்க வேண்டும். மேலும் தேவைக்கேற்ப அவர்கள் சுழற்சி முறையிலும் பயன்படுத்தப்பட வேண்டும்.

4) கண்ணியமான முதல் தரமான ஊதியம் எல்லாம் மருத்துவர்கள் மற்றும் இதர மருத்துவம் சார்ந்த ஊழியர்களுக்கு வழங்கப்படல் வேண்டும். மட்டுமல்லாது ஐஏஎஸ் அதிகாரிகளுக்கு ஈடான ஊதிய உயர்வு, சிறப்பான பணி மற்றும் தகுதி அடிப்படையில் இவர்களுக்கு வழங்கப்பட வேண்டும்.

5) சுகாதார அமைப்புகளின் பணிகள் ஜனநாயக கட்டுப்பாடுகளுக்கு இணங்க மக்கள் மேற்பார்வையில் நடத்தப்பட வேண்டும்.

6) மருத்துவ பிரதிநிதிகள், மக்கள் பிரதிநிதிகள், துணைநிலை மருத்துவ ஊழியர்களின் பிரதிநிதிகள், என அனைவரும் கொண்ட ஒரு தேர்வு செய்யப்பட்ட குழுமம் அன்றாட பிரச்சனைகளை தீர்வு காண அமைக்கப்பட வேண்டும்.

7) எல்லா மருத்துவமனைகளும் மாதம் ஒருமுறை ஒரு பொதுக்கூட்டம் கூட்டி அந்த மருத்துவமனை புகார் பெட்டியில் உள்ள புகார்களையும் ஆலோசனைகளையும் பரிசீலித்தல் அவசியம் வேண்டும்.

8) ஒவ்வொரு நோயாளியும் அவருடைய மருத்துவ சிகிச்சைக்குப் பிறகு, சில அலுவலகம் மற்றும் வங்கிகளில் அவர்களுடைய அனுபவங்கள் குறித்து வினவ, படிவங்கள் கொடுக்கப்படுவது போல, கணக்கெடுப்பு படிவங்கள்( feed back forms) வழங்கப்பட்டு, அதன் அடிப்படையில் செயல்பாடுகள் மேம்பட வழிவகை செய்ய வேண்டும்.

9) மருத்துவம் பயிலும் எல்லா மாணவர்களுக்கும் அலோபதி, ஹோமியோபதி ,சித்தா, என எல்லா வகை மருந்து நடைமுறை பயிற்சிகளும், அடிப்படை இளங்கலை மருத்துவ பயிற்சியிலும், தேவையானால் சிறப்பு தனிப்பயிற்சி பின்னரும் வழங்கப்படவேண்டும். இதனால் எந்த நோய்க்கு என்ன

தீர்வு என்பதை படிப்பறிவு இல்லாத பாமர மக்கள் தீர்மானிக்காமல்,. எல்லா முறைகளிலும் சிறந்த வழிமுறையை நோய் தீர்க்க நோயாளிகளுக்கு பயன்படுத்திட  உதவ வழிசெய்திடும்.

10) மருத்துவப் பாடத்திட்டத்தில், சுற்றுச்சூழல் அறிவியல் மற்றும்  எவ்வாறு நோய்க்கிருமிகள் விலங்குகளில் இருந்து மனிதர்களுக்கு பரவுகிறது என்பதையும் முக்கிய சாராம்சம் ஆக்க வேண்டும்.

நாம் அனைவரும் இணைந்து, அரசினை இந்த கோரிக்கைகள் அனைத்தையும் நடைமுறைப்படுத்த வேண்டி வலியுறுத்துவதே நமது வளமான எதிர்காலத்திற்கான ஒரே வழியாகும்.

Dr. Maya Valecha

Mobile: +91 70160 02688

Email: maya11156@gmail.com